தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் தொழில் நுட்பங்கள் வழங்குவதில் இந்தியாவில் முன்னணியில் உள்ளது. இது மட்டுமன்றி தமிழ்நாட்டில் வேளாண் தொழில் முனைவோர் திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் திட்டம், சுயவேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவும் முக்கிய பங்கு அளித்துள்ளது. ஒவ்வொரு பயிற்சிக்கும் தலா 25 நபர்கள் பங்குபெறக்கூடிய நான்கு பயிற்சிகள் 60 நாட்களுக்கு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராபள்ளி வேளாண்மை கல்லூரிகளில் நடத்தப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் விதை உற்பத்தி, செடிகள் வளர்ப்பு, உயிர் உரங்கள், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மதிப்பு கூட்டும் தொழில்நுட்பங்கள், நுண்ணிய பாசனம் மற்றும் பசுமை குடில் தொழில்நுட்பங்கள் போன்ற பாடங்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சிகள் தமிழகத்தின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி அமைச்சகத்தின் நிதி உதவியோடு நடத்தப்படுகிறது.

வேளாண் தொழில் முனைவோர் பயிற்சியானது இரண்டு பகுதிகளாக 6-01-2014 மற்றும் 20-1-2014 ஆகிய நாட்களில் பயிற்சி பிரிவு, வேளாண் விரிவாக்க இயக்ககம், கோயம்புத்தூரில் நடக்க உள்ளது. மற்ற இரு பயிற்சிகள், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மற்றும் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 6-01-2014 முதல் 60 நாட்களுக்கு நடக்க உள்ளது. இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை, திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகியவை பாடங்கள் மற்றும் செயல்முறை விளக்கம் மூலம் பயிற்சியளிக்கப்படும். இந்த பயிற்சி உணவு மற்றும் தங்கும் வசதியுடன்

(திருச்சிராப்பள்ளியில் தவிர) இலவசமாக வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்குபெற குறைந்தபட்ச கல்வித்தகுதியாக பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும். வேளாண் பட்டப்படிப்பு முடித்தவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறலாம். இப்பயிற்சியில் பங்குபெற்ற பயனாளிகள் தொழில் துவங்குவதற்கான சிறந்த திட்ட வரைவு வைத்திருந்தால் அவர்கள் மாவட்ட தொழில் மையம் மற்றும் வங்கிகள் மூலம் நிதி உதவி பெற பரிந்துரைக்கப்படுவர்.

விருப்பமுள்ள நபர்கள் தங்களது பெயரை தலைவர், பயிற்சி பிரிவு, வேளாண் விரிவாக்க இயக்ககம், கோயம்புத்தூர் **(0422-6611520)**, முதல்வர், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை **(0452-2422985/2422956/2422252)** மற்றும் சிறப்பு அதிகாரி, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி – **0431-2918033/2918034/9489604188)** ஆகிய இடங்களில் பதிவு செய்யலாம். தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு நிகழ்ச்சி ஆரம்பிக்கப்படும் முன் தகவல் அளிக்கப்படும்.

மக்கள் தொடர்பு அலுவலர்